**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure) In the Court of Additional District & Sessions Judge(PCR), III Additional District & Sessions Court (PCR), Madurai.**

| | | |
|---|---|---|
| **Special Sessions Case No.** | – | 65/2021 |
| **Deposition of witness for** | – | PW. 7 (LW. 10 ) |
| **Name** | – | **திரு. சையது முகய்தீன் இப்ராகிம்** |
| **Father's / Husband's Name** | – | **இப்ராகிம்** |
| **Village** | – | |
| **Taluk** | – | |
| **Caste** | – | |
| **Calling** | – | |
| **Religion** | – | |
| **Age** | – | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.06.2026.**

(1,2 எதிரிகள் ஆஜர்)

**விசாரணை தொடங்கிய நேரம் 11.47**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிகிறேன். கடந்த 09.10.2015ம் தேதியன்று நான் மதுரை வடக்கு வட்டாட்சியராக பணிபுரிந்தபோது சமயநல்லூர் காவல்நிலைய குற்ற எண் 373/2015 தொடர்பாக சமயநல்லூர் காவல் துணை கண்காணிப்பாளர் மேற்படி வழக்கில் சம்மந்தப்பட்ட வாதி காளியம்மாள் க/பெ. கண்ணன், மற்றும் ஹரிஹரன் த/பெ, கண்ணன் ஆகியோரின் சாதி சம்மந்தமாக அறிக்கை கோரப்பட்டதன் பேரில் மேற்படி இருவரும் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவர்கள் என அறிக்கை வழங்கினேன். மேலும் மேற்படி வழக்கின் எதிரிகள் சங்கீத், த/பெ. சூரசங்கு மற்றும் முருகேஸ்வரி க/பெ. சூரசங்கு ஆகிய இருவரும் இந்து மறவர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும் அறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய மேற்படி வாதி மற்றும் எதிரிகளின் சாதி சான்று குறித்த சாதி சான்று அறிக்கை அசாஆ–5 ஆகும். அந்த அறிக்கையுடன் நான்

வாதி காளியம்மாள், மற்றும் ஹரிஹரனின் சாதி சான்றிதழையும் இணைத்துள்ளேன். அந்த இரண்டு சாதி சான்றிதழ்கள் அசாஆ– 6 வரிசை. இது தொடர்பாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. எனக்கு சாதி சான்று அறிக்கை வழங்கியது தொடர்பாக காவல் துணை கண்காணிப்பாளரிடம் இருந்து வேண்டுகோள் கடிதம் எதாவது கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்ட்டது அந்த வேண்டுகோளுடன் முதல் தகவல் அறிக்கையின் நகல் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை நான் கொண்டுவந்துள்ள கோப்பில் துணை காவல் கண்காணிப்பாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் உள்ளதா என்றால் இல்லை அது அலுவலகத்தில்தான் இருக்கும். கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரின் விசாரணையின் அடிப்படையில்தான் வாதிகளுக்கு சாதி சான்று அறிக்கை வழங்கினேன். அந்த அறிக்கையில் கிராம நிர்வாக அலுவலரும், வருவாய் ஆய்வாளரும் களஆய்வுக்கு சென்றிருந்த தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஞாபகமில்லை. நான் குறியீடு செய்துள்ள சாதி சான்று அறிக்கையுடன் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரின் களஆய்வு அறிக்கைகள் இணைக்கபடவில்லை என்றால் சரிதான். காளியம்மாள் மற்றும் ஹரிஹரன் நான் குறிப்பிட்டுள்ள சாதியை சேர்ந்தவர்கள்தான் என்பதை உறுதிபடுத்த அந்த ஊரில் உள்ள பஞ்சயத்தார்களை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரும் விசாரித்தார்கள் என்பதை மேற்படி களஆய்வு அறிக்கைகளில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஞாபகமில்லை.

2. எனக்கு காவல் துணை கண்காணிப்பாளர் வேண்டுகோள் கடிதம் 27.09.2015ல் கொடுத்தார் அதன் பிறகுதான் கிராம நிர்வாக அலுவலர் கள விசாரணை நடத்தினார். அந்த விசாரணை நடத்தபடுவதற்கு முன்பு மேற்படி காளியம்மாள், ஹரிஹரனுக்கு சாதி சான்று எதுவும் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசாஆ–6 சாதி சான்றுகள் என்னால் 09.10.2015ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் களஆய்வு

எதற்கும் செல்லவில்லை என்றும் காவல் துணை கண்காணிப்பாளரின் நிர்பந்ததில் சாதி சான்றிதழ்களும், சாதி சான்றிதழ் அறிக்கையும் வழங்கபட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த சாதி சான்று வழங்கபடுவதற்கு முன்பு ஹரிஹரன் ஸ்காலர்சீப்க்கு விண்ணப்பித்து அந்த விண்ணப்பம் எங்கள் அலுவலகத்திற்கு வந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கூறுவது போல் மேற்படி இருவரும் தாழ்த்தப்பட்ட பட்டியல் இனத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்றும் அதனால்தான் அவர்கள் இதுவரை அரசின் நலதிட்ட சலுகைகள் எதையும் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஹரிஹரனோ, காளியம்மாளோ என்னிடம் சாதி சான்று கேட்டு விண்ணப்பம் எதுவும் தரவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை: இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மூன்றாவது கூடுதல் நீதிமன்றம்(பி.சி.ஆர்), மதுரை